அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

அரையாண்டுத்தேர்வு 2015-2016
தமிழ்மொழி

பெயர்:-________________________________

ஆண்டு 10

தாள் 2 மொழிபெயர்ப்பு, கருத்தறிதல்
120 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாவுக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கி வினாத்தாளுடன் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!
- ☐ இவ் வினாத்தாள் கேம்பிறிட்ச் பல்கலைக் கழகத்தின் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர நிலைப் பாடத்திட்டத்திற்கு அமையவும், அப்பல்கலைக் கழகத்தின் தேர்வு வினாத்தாள்களின் அடிப்படையிலும் அமைக்கப் பெற்றது.

1) கீழேயுள்ள உரைப்பகுதியை உமது வாழ்விட மொழியில் எழுதுக!

செல்வி தினமும் பள்ளிக்கு உந்துருளியில் போகும்போது, அவளுடைய மற்றைய நண்பிகள் எல்லோரும் நடந்து போவார்கள். அவளுக்கும் அவளுடைய நெருங்கிய நண்பி தாமரைக்கும் பதினோராவது பிறந்தநாளுக்கு உந்துருளி பரிசாகக் கிடைத்தது. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, இருவரும் பள்ளிக்கு உந்துருளியில் போகத் தொடங்கினார்கள். செல்வி மேட்டில் போக விரும்புவாள். பின்பு மறுபக்கம் கீழே வரும்போது உழக்கியில் (pedal) இருந்து கால்களை எடுத்துவிட்டு வேகமாக வருவாள். மேட்டின் அடிவாரத்தில் தாமரை வருவதற்குக் காத்துக்கொண்டிருப்பாள். பின்பு இருவரும் சேர்ந்து போவார்கள். போகும்போது நண்பிகளைக் கடந்து பார்த்துக்கொண்டு போவார்கள். நண்பிகள் அடிக்கடி தங்கள் பைகளை உந்துருளியின் கைப்பிடியில் மாட்டிக்கொண்டு போகும்படி கேட்பார்கள். ஆனால் செல்வியும் தாமரையும் சிரித்துக்கொண்டே போய் விடுவார்கள். நாள் முழுவதும் என்ன நடந்தாலும் சரி, பள்ளிக்குப் போகும்போதும் வரும்போதும் சிரித்துக்கொண்டே இருப்பார்கள்.

(10 புள்ளிகள்)

2) கீழேயுள்ள ஆங்கில உரைப்பகுதியை தமிழில் எழுதுக!

Jeevan was feeling nervous before his long flight and he had not been able to sleep for the last three nights. He woke early on the day of his flight, knowing that there was still an hour before he had to leave for the airport. He still had a few things to pack, and had to find a lock for the suitcase.

After breakfast, he packed his toothbrush and comb and closed the suitcase. Suddenly, he remembered that he had not packed his coat. The suitcase was getting very full, and he wondered how his big coat was going to fit inside.

Jeevan did his best to close the suitcase, and even sat on it. Then he heard a strange cracking sound and he saw that he had broken it. He panicked as he did not have another suitcase. He knew that the shops would not be open at this time in the morning, so he ran to his neighbor’s house and knocked on the door, but there was no answer.

Desperately, he phoned his friend Vanan, and luckily he did have a spare suitcase. Jeevan jumped into his car and drove the twenty minute journey to his friend’s house, picked up the suitcase and returned home. He emptied all of his items into the new case, locked it, threw it into the boot of his car and rushed to the airport to catch his plane.

Unfortunately, the flight was cancelled due to bad weather.

(20 புள்ளிகள்)

3) கீழேயுள்ள பகுதியைக் கவனமாகப் படிக்கவும்!

தொடக்கப்பள்ளி வகுப்பில் இருந்த குழந்தைகள் மிகவும் ஆவலுடன் இருந்தனர். அவர்கள் முதன் முதலாக தங்கள் பெற்றோர் சகோதரர்களுக்கு முன்னால் ஒரு நாடகம் போடப் போகின்றார்கள். விலங்குகள் காட்சியகத்தில் உள்ள விலங்குகள் எல்லாம் சேர்ந்து, யார் மிகவும் புத்திசாலி என்று காட்டப்படும் ஒரு கதையாகும். வகுப்பில் உள்ள முப்பது குழந்தைகளும் இதில் பங்கு பெற்றனர். சிலருக்குப் பேச வேண்டிய பாகம் இருந்தது. மற்றவர்களுக்கு எந்த விலங்கின் பாகம் கொடுத்திருந்தார்களோ, அதே மாதிரி நடனம் ஆடி நடிக்க வேண்டும். ஆசிரியர்களும் அவர்களுக்கு உதவி செய்பவர்களும் காலை முழுவதும் குழந்தைகளின் உடுப்புகளை பிரித்துப் பிரித்து பெட்டிகளில் போட்டு, குழந்தைகளின் பெயரை எழுதி வைத்தனர். முந்தின வாரம் குழந்தைகள் எல்லோரும் விலங்குகளின் முகமூடிகளையும், சிங்கம், புலி, குரங்கு, ஒட்டகச்சிவிங்கி ஆகியவற்றின் படங்களையும் வரைந்தனர்.

ஆசிரியர் நாடகத்துக்கு வேண்டிய கறுப்பு நிறக் காற்சட்டையும் கறுப்பு நிற மேற்சட்டையும் கொண்டு வரச் சொல்லி குழந்தைகளிடம் கூறினார். கிட்டத்தட்ட எல்லோரும் கொண்டு வந்தனர். ஆசிரியர் இரண்டு மூன்று உடுப்புகள் அதிகப்படியாக வைத்திருந்தார். எல்லாம் சரியாக இருந்தும், நாடகம் நடக்கும் நேரம் நெருங்க ஆசிரியர் மிகவும் கவலையுடன் இருந்தார். குழந்தைகளை மதிய உணவை விரைவில் உண்ணச் சொல்லி, கொஞ்ச நேரம் வெளியில் விளையாடச் சொன்னார். ஏனென்றால் பிறகு குழந்தைகள் உள்ளே வந்து நாடகத்துக்கு வேண்டிய உடுப்புகளை மாற்றி முகமூடிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும். மூன்று பையன்கள் இதை மறந்து விட்டனர். மற்ற குழந்கைகள் உள்ளே வந்து, ஆயத்தம் ஆகலாமா என்று கேட்கும்போது, ஆசிரியர் வராத பையன்களைத் தேடிக் கொண்டு போனார். அவர்கள் வெளியே கால்பந்து விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

ஆசிரியர் உள்ளே திரும்பி வரும்போது இரண்டு சிறுமிகள் முகமூடி யாருடையது என்று விவாதம் செய்து கொண்டு இருந்தார்கள். சில காற்சட்டைகள் மாறி இருந்தது போல் தோன்றியது. ஒரு பையன் இரண்டு அளவுக்குப் பெரியதாக ஒரு காற்சட்டை போட்டுக் கொண்டிருந்தான். உதவி செய்பவர் ஒருவர் அந்தப் பையனுக்கு அவனது அளவுக்கு காற்சட்டை தேடிக் கொண்டு இருந்தார். ஆசிரியர் உள்ளே கூட்டிக்கொண்டு வந்த மூன்று பையன்களையும் நல்ல மாதிரியாக இருக்கச் சொல்லி அதட்டிவிட்டு, உடைகளை மாற்றச் சொன்னார். அப்பொழுது பெற்றோர்கள், உறவினர்கள் வந்து, சிறிய பள்ளிக்கூட மண்டபத்தில் இருக்கத் தொடங்கினர்.

தனித்தனியாக குழந்தைகள் ஆயத்தம் ஆன பிறகு, ஆசிரியர் அவர்களை மேடையில் ஏறுவதற்கு வரிசையாக வந்து நிற்கச் சொன்னார். ஆசிரியர் தன் ஒரு விரலை உதட்டில் வைத்துக் கொண்டு, குழந்தைகளைத் தன் பின்னால் சத்தம் போடாமல் வரச் சொன்னார். மண்டபத்தின் பின்னால் நின்று கொண்டு மேடையைப் பார்த்து கையை ஆட்டிவிட்டு, மௌனமாகப் பிரார்த்தனை செய்தார். ஒரு குழந்தை மேலே ஏறும் போது, அவள் கையில் இருந்த தாள் கீழே விழுந்தது. பின்னர் பின்னால் வந்தவரோடு மோதிக்கொண்டாள்.

இப்படிப் பல பிரச்சனைகள் இருந்தும் குழந்தைகள் நன்றாகச் செய்தனர். எல்லோரும் தங்கள் வசனங்களை மறக்காமல் சொல்லி, நடனம் ஆடி நன்றாகச் செய்தனர். நாடகம் முடியும் போது குழந்தைகளுடன் ஆசிரியரும் மேடைக்கு வந்தார். அப்பொழுது எல்லோரும் எழுந்து நின்று கை தட்டினார்கள். ஆசிரியர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

பின்வரும் வினாக்களுக்கு பனுவலில் இருந்து அப்படியே சொற்களையோ, வாக்கியங்களையோ எடுத்தெழுதாது விடைகளைத் தருக!

1. குழந்தைகள் என்ன கதையை நாடகமாகச் செய்யப் போகின்றார்கள்? (2)
2. நாடகத்துக்கு குழந்தைகள் என்ன என்ன ஆயத்தங்கள் செய்தனர்? (2)
3. குழந்தைகள் நாடகத்துக்கு என்ன மாதிரி உடைகள் அணிந்தனர்? (2)
4. ஏன் குழந்தைகள் குறைந்த நேரம் விளையாட்டுத் திடலில் இருந்தனர்? (3)
5. நாடகம் தொடங்க முன்னர் தவறாக நடந்த மூன்று நிகழ்வுகளைக் கூறவும்? (3)
6. ஆசிரியர் ஏன் மௌனமாகப் பிரார்த்தனை செய்தார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? (2)
7. எந்தச் செயற்பாடுகள் ஆசிரியர் நன்றாக வேலை செய்தார் என்பதற்குச் சான்றாக உள்ளன? (3)
8. மேடையில் ஏறும் போது குழந்தைகள் எப்படி நடந்து கொண்டார்கள்? (3)
9. பார்வையாளர்களின் ஆதரவு நாடகத்துக்கு எப்பிடி இருந்தது? (2)
10. ஆசிரியர் ஏன் மகிழ்ச்சியாக இருந்தார் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? (3)

(25 புள்ளிகள்)